# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 35/2020

Prosecution witness PW - 6

| | | |
|---|---|---|
| Name | …. | Sampath |
| Father's Name | .... | Kuzhanthaivel |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | 37 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 20th day of August 2025.

முதல் விசாரணை

நான் பலகண்டபுதுார் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அருள் என்பவரை தெரியும். அ.சா.1, 2 ஐ தெரியும். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு சம்பவம் நடந்தது. விமல், அருள், அசோக் ஆகியோர் பலகண்டபுதுார் களத்துமேட்டில் இரவு சுமார் 9.00 - 10.00 மணியளவில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அருள் பட்டாசு வெடித்தார். பட்டாசு வெடித்து கார்த்தியின் மேல் பட்டது. கார்த்தி தள்ளிபோய் பட்டாசு வெடிக்குமாறு கூறினார். அருளும் கார்த்தியும் பட்டாசை தள்ளிபோய் வெடிக்குமாறு கூறியதும் இருவருக்கும் கைளப்பு ஏற்பட்டது. அதன்பின்பு அருளும், கார்த்தியும் வீட்டிற்கு சென்றுவிட்டனர். விடியற்காலை 3.00 மணியளவில் கார்த்தி அவர் வீட்டில் துாங்கிக்கொண்டிருந்தார். நான் என் வீட்டில் துாங்கிகொண்டிருந்தேன். என் வீட்டு

எதிர் வீட்டில் தான் கார்த்தி வீடு உள்ளது. அருள் கார்த்தியை வெட்டிவிட்டார் சத்தம் கேட்டது. நான் அங்குபோய் பார்த்தபோது அருள் ஓடிவிட்டார். கார்த்திக்கு வலது கன்னத்தில் வெட்டுகாயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. அதன்பின்பு பெரணமல்லூர் காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக அவர் வீட்டில் புகார் கொடுத்தனர். கார்த்தியை செய்யாறு அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்பு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியும். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

குறுக்கு விசாரணை

இல்லை. (வழக்கறிஞர் ஆஜர்)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 35/2020

Prosecution witness PW - 5

| | | |
|---|---|---|
| Name | …. | Vinayagam |
| Father's Name | .... | Thavamani |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | 37 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 20th day of August 2025.

முதல் விசாரணை

நான் பலகண்டபுதூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அருள் என்பவரை தெரியும். சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு சம்பவம் நடந்தது. ஆண்டு, மாதம் எனக்கு தெரியாது. விடியற்காலை 3.00 மணிக்கு சத்தம் கேட்டது. நான் ஓடி பார்க்கும்போது அருள் என்பவர் கார்த்தியை வெட்டிவிட்டு கத்தியை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார். நான் தான் கத்தியை எடுத்து ஆஜர்படுத்தினேன். அதன்பிறகு நான் ஆளை தேடினேன் கிடைக்கவில்லை. நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். வலது கன்னத்தில் வெட்டு காயம் ஏற்பட்டிருந்தது. பிறகு செய்யாறு அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள். அங்கு முடியாது என்று சொல்லவே செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

ஒரு மாதம் மருத்துவமனையில் இருந்தார். அடிப்பட்டவர் எனக்கு அக்கா மகன். சம்பவத்திற்கு முன்னால் மாலை சுமார் 5.30 மணிக்கு களத்துமேட்டில் பட்டாசு வெடித்துக்கொண்டிருந்தார். அப்போது தகராறு ஏற்பட்டது. அதன் காரணமாக தான் கார்த்திக்கை அருள் வெட்டிவிட்டார். இந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

குறுக்கு விசாரணை

இல்லை. (வழக்கறிஞர் ஆஜர்)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 35/2020

Prosecution witness PW - 4

| | | |
|---|---|---|
| Name | …. | Vimal |
| Father's Name | .... | Subramani |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | 37 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 20th day of August 2025.

முதல் விசாரணை

நான் பலகண்டபுதூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் மார்கெட்டிங்க பணி செய்து வருகிறேன். சுமார் 12 வருடத்திற்கு முன்பு நவம்பர் மாதம் 02 ஆம் தேதி 2013 ஆம் ஆண்டு சென்னையிலிருந்து நான் ஊரில் ஒரு இடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது பலகண்டபுதூர் கிராமத்தில் நெல் களம் அருகில் பேசிக்கொண்டிருந்தபோது இரவு சுமார் 7.00 மணியளவில் அசோக், கார்த்திக் மற்றும் நானும் பேசிக்கொண்டிருந்தோம். அருள் என்பவர் பட்டாசு வெடித்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு பட்டாசை கொளுத்தி கார்த்தியின் மீது போட்டுவிட்டார். கார்த்தி என்பவர் ஏன் என் மீது பட்டாசு கொளுத்தி போடுகிறாய் என்று கேட்டார். அதற்கு நான் இது பொது இடம் தான் நான் அப்படிதான் கொளுத்துவேன் என்று சொன்னார். அதனால் மேற்படி இருவரும்

மாறிமாறி திட்டிக்கொண்டனர். அப்போது எதிரி தேவிடியா பையா என கார்த்தியை தகாத வார்த்தையால் திட்டினார். அதன் பின்பு சண்டை போட்டுக்கொண்டிருந்தவர்களை நாங்கள் விலக்கி விட்டோம். அருள் கார்த்திகை கையால் அடித்தார். நாங்கள் விலக்கிவிட்டோம். சத்தம்கேட்டு ஊரில் உள்ள அனைவரும் வந்து பார்த்தனர். என் தகப்பனார் என்னை அழைத்து சென்றுவிட்டார். பின்பு நான் இரவு சாப்பிட்டுவிட்டு தூங்கிவிட்டேன். மறுநாள் காலை நான் தூங்கி எழுந்தபோது அருள் என்பவர் கார்த்திக்கை கன்னத்தில் விடியற்காலை 3.00 மணிக்கு வெட்டிவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

குறுக்கு விசாரணை

இல்லை. (வழக்கறிஞர் ஆஜர்)